Click Here to Learn more: https://cutt.ly/MmZMBsX

# பகுதி – ஆ இலக்கியம்

## 1. திருக்குறள்

**1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்.**
**இக்குறளில் எதைத் தாழ்ப்பாளால் அடைக்க முடியாது என்று கூறப்படுகின்றது?**
A) கண்ணீர் B) அன்பு
C) நட்பு D) இவை அனைத்தும்

**2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.**
**இக்குறள் உணர்த்தும் அன்பிலார் செயல் யாது?**
A) பிறர்க்கு எல்லாம் கொடுத்தல்
B) பிறர் துன்பம் கண்டு கண்ணீர் விடுதல்
C) எல்லாம் தமக்குரியதாக்குதல்
D) இவை அனைத்தும்

**3. அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு.**
**இக்குறளில் 'ஆருயிர்' என்னும் தொடர் உணர்த்தும் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
A) ஆறுதல் உயிர் B) அருமையான உயிர்
C) உயிருக்கு உயிரான D) இவை அனைத்தும்

**4. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.**
**இக்குறளின் பொருள் உணர்ந்து பொருத்தமான தொடரை எழுதுக.**
A) அன்பு விருப்பத்தைத் தரும்
B) அன்பு வளமையைத் தரும்
C) அன்பு பொறுமையைத் தரும்.
D) இவை அனைத்தும்

**5. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை.**
**இக்குறளில் மறத்திற்கும் என்னும் சொல்லில் 'உம்' என்ற விகுதி உணர்த்துவது யாது?**
A) அறத்திற்கு மட்டுமே அன்பு துணை நிற்கும்
B) அறத்திற்கு மட்டும் அன்று மறத்திற்கும் அன்பு துணை நிற்கும்.
C) மறத்திற்கு மட்டும் அன்பு துணை நிற்கும்
D) இவை அனைத்தும்

**6. என்பி லதனை வெயில்போலக் காயுமே அன்பி லதனை அறம்.**
**இக்குறளில் வருத்தும் என்ற பொருளைத் தரும் சொல் யாது?**
A) வெயில் B) அறம்
C) காயும் D) இவை அனைத்தும்

**7. பாலை நிலத்தில் உள்ள வாடிப் போன மரம் போல் என்ற பொருளை உணர்த்தும் தொடர் இடம் பெற்ற திருக்குறளை எழுதுக.**
A) என்பி லதனை வெயில்போலக் காயுமே அன்பி லதனை அறம்.
B) அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு.
C) அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரம்தளிர்த் தற்று.
D) அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை.

**8. அன்பில்லாதார்க்கு உடலுறுப்புகளால் என்ன பயன் என்ற வினா அமைந்த குறள் எது?**
A) கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்.
B) சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை.
C) புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.
D) அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு.

**9. 'வெறும் தோலால் மூடப்பட்ட எலும்பு' – குறளிலிருந்து பொருத்தமான தொடரை எடுத்து எழுதுக.**
A) உடம்பு தோல் போர்த்த என்பு
B) என்பு போர்த்த தோல் உடம்பு
C) என்புதோல் போர்த்த உடம்பு
D) இவை அனைத்தும்

**10. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற.**
**–இக்குறள் குறிப்பிடும் உண்மையான அணிகலன் எது?**
A) அழகுக்காக அணியும் ஆபரணங்கள்
B) பணிவும் இன்சொல்லும்
C) கடுஞ்சொற்களைப் பேசாதிருத்தல்
D) இவை அனைத்தும்

**11. அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின்.**
**–இக்குறளில் கொடுத்தல் எனும் பொருள் தரும் சொல் யாது?**
A) அகனமர்ந்து B) ஈதலின்
C) பெறின் D) இவை அனைத்தும்

**12. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்.**
**–இக்குறளில் 'பாவம்' என்ற பொருள் தரும் சொல் யாது?**
A) அறம் B) நல்லவை
C) அல்லவை D) இவை அனைத்தும்

**13. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| a) | படிறு | 1. | பாவம் |
| b) | துவ்வாமை | 2. | மறுபிறவி |
| c) | அல்லவை | 3. | இனியசொல் |
| d) | மறுமை | 4. | வஞ்சம் |
| e) | கனி | 5. | வறுமை |

**குறியீடுகள்:**

| | a) | b) | c) | d) | e) |
|---|---|---|---|---|---|
| A) | 4 | 5 | 1 | 2 | 3 |
| B) | 3 | 1 | 2 | 4 | 5 |
| C) | 4 | 1 | 2 | 5 | 3 |
| D) | 1 | 2 | 4 | 3 | 5 |

**14. உடலை நீர் தூய்மை செய்யும்; உள்ளத் தூய்மையை வெளிப்படுத்துவது ....................**
A) இன்னாச்சொல் B) வாய்மை
C) பழிச்சொல் D) இனிய சொல்

**15. வாய்மை எனப்படுவது யாதெனில்.**
A) மற்றவர்களுக்குத் தீங்கு தராத சொற்களைப் பேசுதல்
B) புறங்கூறாமை
C) பழி கூறாமை
D) பொய் கூறாமை

1. (B) 2. (C) 3. (B) 4. (A) 5. (B) 6. (C) 7. (C) 8. (C) 9. (C) 10. (B) 11. (B) 12. (C)
13. (A) 14. (B) 15. (A)



Click Here to Learn more: https://cutt.ly/MmZMBsX

Click Here to Learn more: https://cutt.ly/MmZMBsX



16. "பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"
– இக்குறளில் 'புரைதீர்ந்த' என்ற சொல் குறிக்கும் பொருள் யாது?
A) குற்றமுடைய B) குற்றமில்லாத
C) நன்மையைத் தரும் D) தீமையைத் தரும்

17. "பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"
– இக்குறளில் 'கடைபிடித்தல்' என்ற பொருள் தரும் சொல் எது?
A) நன்று B) அறம்பிற
C) ஆற்றின் D) செய்யாமை

18. "பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்"
–இக்குறளில் 'வருந்தாமல்' என்ற பொருள் தரும் சொல் எது?
A) எய்யாமை B) பொய்யாமை
C) புகழில்லை D) அறமும்

19. உண்மை பேசுபவர்கள் யார் உள்ளத்தில் நிறைந்திருப்பார்கள்?
A) சான்றோர்கள்
B) உலகத்தார்
C) தவத்தொடு தானம் செய்பவர்
D) இவை அனைத்தும்

20. திருவள்ளுவர் வாழ்ந்த காலம்
A) கி.மு. 21 B) கி.மு. 11
C) கி.மு. 31 D) கி.மு. 15

21. திருக்குறளில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன
A) 133 B) 1330
C) 163 D) 1630

22. குறள் வெண்பாக்களால் ஆன நூல் ............
A) திருக்குறள் B) நாலடியார்
C) நான்மணிக்கடிகை D) திருமந்திரம்

23. திருக்குறளில் ................ அதிகாரங்கள் உள்ளன.
A) 133 B) 1330
C) 1230 D) 144

24. உலகம் ஏற்கும் கருத்துகளைக் கொண்டுள்ளதால் திருக்குறள் ............ என வழங்கப்படுகிறது
A) உலகப் பொதுமறை B) திருமறை
C) நான்மறை D) குடிமக்கள் மறை

25. திருக்குறளில் கல்வி அதிகாரம் ........... அதிகாரமாய் .............. பாலில் உள்ளது
A) 40ஆவது, பொருட் B) 50ஆவது, பொருட்
C) 60ஆவது, பொருட் D) 70ஆவது, பொருட்

26. "மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான்" என்று வள்ளுவரைப் பாராட்டியவர்
A) கபிலர் B) பரணர்
C) நக்கீரர் D) மாமூலனார்

27. திருக்குறள் ............. வெண்பாக்களால் ஆன நூலாகும்.
A) சிந்தியல் B) குறள்
C) நேரிசை D) நிரையிசை

28. 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர்
A) பாரதியார் B) சுரதா
C) பாரதிதாசன் D) கண்ணதாசன்

29. பொருத்துக.
a) அறத்துப்பால் 1. 25 அதிகாரங்கள்
b) பொருட்பால் 2. 38 அதிகாரங்கள்
c) இன்பத்துப்பால் 3. 70 அதிகாரங்கள்

குறியீடுகள்:

| | a) | b) | c) |
|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 |
| B) | 3 | 1 | 2 |
| C) | 4 | 1 | 2 |
| D) | 1 | 2 | 4 |

30. யாரிடம் அறக்கடவுள் சென்றடையும் என வள்ளுவர் கூறுகிறார்?
A) தானம் செய்பவரிடத்து
B) வீரமுடையாரிடத்து
C) சினத்தை அடக்குபவரிடத்து
D) தவம் செய்பவரிடத்து

31. அரியவற்றுள் எல்லாம் அரிது ......................... பேணித் தமராக் கொளல்
A) சிறியவர் B) பெரியார்
C) உறவினர் D) பகைவர்

32. முதலிலார்க்கு ......................... இல்லை.
A) ஊதியம் B) நட்பு
C) பகை D) இவை அனைத்தும்

33. தமிழ் மாதின் இனிய உயிர்நிலை என்று பாராட்டப் பெறுவது
A) ஆசியசோதி B) சிலப்பதிகாரம்
C) திருக்குறள் D) மணிமேகலை

34. திருக்குறள் என்பது
A) அடையடுத்த கருவியாகு பெயர்
B) பண்புப்பெயர்
C) அன்மொழித் தொகை
D) வினைத்தொகை

35. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
A) 133 B) 38
C) 35 D) 52

36. அறத்துப்பாலில் அமைந்துள்ள இயல்கள்
A) அரசியல், அரணியல், ஒழிபியல்
B) களவியல், கற்பியல்
C) பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்
D) நட்பியல், கற்பியல்

37. அறத்துப்பாலில் அமைந்துள்ள இயல்கள்
A) 9 B) 4
C) 7 D) 2

38. பொருட்பாலின் இயல்கள்
A) பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்
B) அரசியல், அரணியல், கூழியல்
C) களவியல், கற்பியல்
D) நட்பியல், களவியல்

39. குறட்பா என்பது
A) நாலடி வெண்பா B) மூவடி வெண்பா
C) ஈரடி வெண்பா D) ஐந்தடி வெண்பா

40. பொருட்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
A) 70 B) 38
C) 25 D) 50

41. தன் மனமறிந்து பொய் பேசுபவனை இடித்துரைப்பது ..............
A) மக்கள் B) மனசாட்சி
C) மன்னன் D) சான்றோர்

42. வள்ளுவர் குறிப்பிடும் தூய்மை எது?
A) அகத்தூய்மை B) புறத்தூய்மை
C) செயல்தூய்மை D) இவை அனைத்தும்

16. (B) 17. (C) 18. (A) 19. (B) 20. (C) 21. (B) 22. (A) 23. (A) 24. (A) 25. (A) 26. (B) 27. (B)
28. (C) 29. (A) 30. (C) 31. (B) 32. (A) 33. (C) 34. (A) 35. (B) 36. (C) 37. (B) 38. (B) 39. (C)
40. (A) 41. (B) 42. (A)



Click Here to Learn more: https://cutt.ly/MmZMBsX

Click Here to Learn more: https://cutt.ly/MmZMBsX



**43. அகவிருளைப் போக்கும் விளக்கு எது?**
A) வாய்மை B) தவம்
C) தானம் D) தூய்மை

**44. அகத்தூய்மை எதனைக் குறிக்கின்றது?**
A) உடல்தூய்மை B) உள்ளத்தூய்மை
C) தூய்மையான உடைகள் D) குற்றமற்ற சொல்

**45. திருக்குறள் ........ நூல்களுள் ஒன்று.**
A) சங்கத்தொகை நூல்கள் B) பதினெண்கீழ்க்கணக்கு
C) ஐம்பெருங்காப்பியங்கள் D) பதினெண்மேற்கணக்கு

**46. திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது ?**
A) 100 B) 200
C) 107 D) 207

**47. ''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு''.**
**– என்ற குறளில் எண் என்பது கணிதத்தைக் குறிக்கிறது. எழுத்து எதைக் குறிக்கிறது?**
A) வரிவடிவம் B) இலக்கணம்
C) இலக்கியங்கள் D) இலக்கண இலக்கியங்கள்

**48. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார் கடையரே கல்லா தவர்''.**
**–என்ற குறளில் 'பணிந்து என்ற பொருளைத் தரும் சொல் எது?**
A) உடையார் B) கடையர்
C) ஏக்கற்று D) இல்லார்போல்

**49. 'ஏமாப்பு' என்ற சொல்லின் பொருள்.**
A) குற்றம் B) செல்வம்
C) ஏற்றவாறு D) பாதுகாப்பு

**50. 'துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மட்டும் இன்புறூஉம் இன் சொலவர்க்கு'.**
**–என்ற குறளில் வரும் 'துவ்வாமை' சொல் எந்தப் பொருளைக் குறிக்கிறது?**
A) இன்சொல் B) இன்பம்
C) வறுமை D) துன்பம்

**51. ''அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்'' என்று திருக்குறளைப் பாராட்டியவர் யார்?**
A) ஔவையார் B) கம்பர்
C) ஒட்டக்கூத்தர் D) புகழேந்தி

**52. திருக்குறளில் அறத்துப்பால் எந்தவாழ்வின் மேன்மைப் பற்றிக் கூறுகிறது.**
A) சமுதய வாழ்க்கை B) அரசியல் வாழ்க்கை
C) தனிமனித வாழ்க்கை D) அகவாழ்க்கை

**53. திருக்குறளில் பொருட்பால் எந்த வாழ்வினை சுட்டிக் காட்டுகிறது?**
A) அகவாழ்க்கை B) தனிமனித வாழ்க்கை
C) துறவறவாழ்க்கை D) சமுதாய வாழ்க்கை

**54. ''நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்நீர பேதையார் நட்பு''**
**–இக்குறளில் அறிவுடையர்களின் நட்புக்கு வள்ளுவர் கூறிய உவமை யாது?**
A) தேய்பிறை B) வளர்பிறை
C) நூலின்பம் D) குளத்தில் நிறைவாக உள்ள நீர்

**55. ''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்''**
**–என்ற குறளில் உரிமை என்ற பொருளைத் தரும் சொல் எது?**
A) புணர்ச்சி B) உணர்ச்சி
C) கிழமை D) பழகு

**56. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| a) | பேதையார் நட்பு | 1. | உடுக்கை இழந்தவர் கை போன்றது |
| b) | பண்புடையாளர் தொடர்பு | 2. | வளர்பிறை போன்றது |
| c) | அறிவுடையார் நட்பு | 3. | நவில்தொறும் நூல்நயம் போன்றது |
| d) | இடுக்கண் களையும் நட்பு | 4. | தேய்பிறை போன்றது |

குறியீடுகள்:

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 1 | 2 | 4 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 1 | 2 | 4 | 3 |

**57. 'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர் மக்கட்பண்பு இல்லா தவர்''**
**–இக்குறளில் வள்ளுவர் குறிப்பிடும் மரம்போல்வர் யாவர்?**
A) அறிவில்லாதவர்கள் B) கல்லாதவர்கள்
C) பண்பில்லாதவர்கள் D) பொறாமையுடையவர்கள்

**58. ''மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் தகுதியால் வென்று விடல்''**
**–இக்குறளில் ''தகுதியால்'' தீமை செய்தோரை வெல்ல வேண்டும் என வள்ளுவர் கூறுகிறார். 'தகுதியால்' என்பது எதைக் குறிக்கிறது?**
A) செல்வம் B) பொறுமை
C) வீரம் D) தவம்

**(வினா எண் : 59 – 61)**
**"துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய் இன்னாச்சொல் நோற்கிற் பவர்"**

**59. மேற்கண்ட குறளில் காணப்படும் 'இறந்தார்வாய்' என்ற சொல்லின் பொருள் யாது?**
A) பொய்பேசுபவர்கள்
B) கொடிய சொற்களைப் பேசுபவர்கள்
C) இழிந்த சொற்களைப் பேசுபவர்கள்
D) வரம்பு கடந்து பேசுபவர்கள்.

**60. பொறுமையுடன் இருப்பவர்கள் யாரை விட மேலானவர்கள்?**
A) சான்றோர்கள் B) அரசர்கள்
C) துறவியர்கள் D) முனிவர்கள்

**61. 'தூய்மை உடையர்' யார்?**
A) துறவியர்கள்
B) உயர்ந்த சொற்களைப் பேசுபவர்கள்
C) வாய்மை பேசுபவர்கள்
D) பொறுமையுடையோர்

**62. காலையில் எழுந்ததும் திருக்குறளைப் படிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தவர்.**
A) ஜி.யு. போப் B) விக்டோரியா மகாராணியார்
C) வீரமாமுனிவர் D) கால்டுவெல்

**63. கீழ்க்கண்டவர்களில் யாருடைய 'திருக்குறள் உரைநூல்'' மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது?**
A) மணக்குடவர் B) காளிங்கர்
C) நச்சினார்க்கினியர் D) பரிமேலழகர்

**64. ''கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு''**
**–என்ற குறளில் சான்றாண்மையாகக் குறிப்பிடப்படுவது எது?**
A) பிறருடைய குறைகளைப் பேசாதிருத்தல்
B) பிற உயிர்களைக் கொல்லாமை
C) பிறருக்கு உதவிசெய்தல்
D) பகைவரிடமும் நட்பு பாராட்டுதல்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 43. (A) | 44. (B) | 45. (B) | 46. (C) | 47. (D) | 48. (C) | 49. (D) | 50. (C) | 51. (A) | 52. (C) | 53. (D) | 54. (B) |
| 55. (C) | 56. (A) | 57. (C) | 58. (B) | 59. (D) | 60. (C) | 61. (D) | 62. (B) | 63. (D) | 64. (A) | | |



Click Here to Learn more: https://cutt.ly/MmZMBsX

Click Here to Learn more: https://cutt.ly/MmZMBsX



65. 'உத்தர வேதம்' என்று அழைக்கப்படுவது.
A) நாலடியார் B) திருக்குறள்
C) நான்மணிக்கடிகை D) புறநானூறு

66. "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" – என்று திருக்குறளைப் பாராட்டியவர்.
A) இடைக்காடர் B) ஔவையார்
C) நச்சினார்க்கினியர் D) பரிமேலழகர்

67. சமுதாயத்திற்கு உதவி செய்து வாழ்தலின் சிறப்பு கீழ்க்கண்ட எந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது ?
A) வலியறிதல் B) சான்றாண்மை
C) பண்புடைமை D) ஒப்புரவறிதல்

68. 'மாதானுபங்கி' என்று அழைக்கப்படும் புலவர்.
A) கபிலர் B) ஔவையார்
C) திருவள்ளுவர் D) ஒட்டக்கூத்தர்

69. திருக்குறளில் 'ஏழு' என்ற எண் எத்தனைமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது ?
A) எட்டு B) ஒன்பது
C) பத்து D) ஆறு

70. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"
–என்ற குறளில் கூறப்பட்ட கருத்து யாது?
A) நன்றி மறவாமை
B) தீயனவற்றை மறப்பது
C) செய்ந்நன்றி மறத்தலின் கொடுமை
D) காலத்தால் செய்த உதவியின் நன்மை

71. கற்றலை விடவும் சிறந்தது.
A) அறிவுடைமை B) பொறையுடைமை
C) ஒழுக்கமுடைமை D) இவை அனைத்தும்

72. கற்றலை விடச் சிறந்தது.
A) கற்றாரை வணங்குதல் B) துறவோரை வணங்குதல்
C) மன்னரை வணங்குதல் D) சான்றோரை வணங்குதல்

73. 'முயற்சி திருவினையாக்கும்' என்று கூறியவர்
A) ஔவையார் B) திருவள்ளுவர்
C) பாரதியார் D) உலகநாதர்

74. திருக்குறளை இலத்தீனில் மொழிபெயர்த்தவர்
A) கால்டுவெல் B) பென்னிகுயிக்
C) வீரமாமுனிவர் D) சீகன்பால்கு

75. செவிக்குணவாவது ..................
A) புகழ் B) கேள்வி
C) மகிழ்ச்சி D) காட்சி

76. ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் ..................
A) ஊற்றுக்கோல்
B) அளவுகோல்
C) துலாக்கோல்
D) மேற்சொன்னவைகள் அனைத்தும்

77. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர்
A) அன்புள்ள பெற்றோர் B) ஆர்வமுள்ள நண்பர்
C) மூத்த அறிவுடையார் D) நற்பண்புடையோர்

78. திருக்குறளில் ஒரேபெயரில் இடம்பெற்று அதிகாரங்களின் எண்ணிக்கை
A) மூன்று B) இரண்டு
C) நான்கு D) ஐந்து

79. பயவாக் களரனையர் – எனக் கூறியவர்
A) திருமூலர் B) ஔவையார்
C) திருவள்ளுவர் D) கம்பர்

80. திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர்
A) டென்னிசன் B) தாம்சன்
C) தால்சுதாய் D) சிம்சன்

81. சால்பினைத் தாங்கும் தூண்கள் எத்தனை?
A) ஐந்து B) நான்கு
C) மூன்று D) ஆறு

82. வள்ளுவர் கூறும் கீழ்மக்களது ஆச்சாரம் எது?
A) அடங்காமை B) அச்சம்
C) கல்லாமை D) கள்ளுண்ணல்

83. மரம் போல்வர் யார்?
A) மக்கட் பண்பில்லாவர் B) செல்வமில்லாவர்
C) கல்வியில்லாதவர் D) உழைப்பில்லாதவர்

84. புரையோர் கேண்மை என்பது எது?
A) பெண்கள் நட்பு B) முதியோர் நட்பு
C) தாழ்ந்தோர் நட்பு D) உயர்ந்தோர் நட்பு

85. மானம் அழிய நேர்ந்தால் உயிர் விடுபவர் எதைப் போன்றவர்?
A) புலியை B) யானையை
C) அன்னத்தை D) கவரிமானை

86. கஞ்சனின் செல்வம் எதைப் போன்றது?
A) மரம் B) கல்
C) நோய் D) நச்சுமரம்

87. நச்சப்படாதவன் செல்வம் எத்தகையது?
A) நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று
B) நிலக்குப் பொறை
C) தடியல் மூத்தற்று
D) உறைபதி என்னும் உலகு

88. மரப்பாவை போன்றோர் யார்?
A) நாணமில்லாதவர் B) செல்வமில்லாதவர்
C) குணமில்லாதவர் D) சான்றாண்மை இல்லாதவர்

89. ஏரினும் நன்றால் ............... நிரப்புக.
A) நீரிடுதல் B) எரு இடுதல்
C) மண் இடுதல் D) உழவு எடுத்தல்

90. "தலையின் இழிந்த மயிரனையர்" – யார்?
A) செல்வம் மிக்கவர்கள்
B) பகைவர்கள்
C) நிலையிலிருந்து தாழ்பவர்கள்
D) உயர் குடியினர்

91. 'செயற்கரிய செய்வார் பெரியார்'
A) திருக்குறள் B) நாலடியார்
C) சிலப்பதிகாரம் D) இனியவை நாற்பது

92. 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர்'
A) நாலடியார் B) பழமொழி
C) திருக்குறள் D) கார் நாற்பது

93. 'ஊழிற் பெருவலி யாவுள'
A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை
C) சீவகசிந்தாமணி D) திருக்குறள்

94. 'செய்தக்க செய்யாமை யானும் கெடும்'
A) திருக்குறள் B) நாலடியார்
C) பழமொழி D) ஆசாரக்கோவை

95. 'முகநக நட்பது நட்பன்று'
A) பழமொழி B) நாலடியார்
C) இன்னா நாற்பது D) திருக்குறள்

96. 'ஒருவர் பொறை இருவர் நட்பு'
A) நான்மணிக்கடிகை B) நாலடியார்
C) திரிகடுகம் D) திருக்குறள்

97. 'தன்னைத்தான் காக்கின் சினம் காக்க'
A) திருக்குறள் B) நாலடியார்
C) இனியவை நாற்பது D) திரிகடுகம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 65. (B) | 66. (A) | 67. (D) | 68. (C) | 69. (A) | 70. (C) | 71. (C) | 72. (A) | 73. (B) | 74. (C) | 75. (B) | 76. (A) |
| 77. (C) | 78. (B) | 79. (C) | 80. (C) | 81. (A) | 82. (B) | 83. (A) | 84. (C) | 85. (D) | 86. (D) | 87. (A) | 88. (A) |
| 89. (B) | 90. (C) | 91. (A) | 92. (C) | 93. (D) | 94. (D) | 95. (A) | 96. (D) | 97. (B) | | | |



Click Here to Learn more: https://cutt.ly/MmZMBsX